***கவனிக்க.-** 2006.05.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ), பகுதி II, பகுதி III, பகுதி IV (அ) மற்றும் IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1446 - 20006 මැයි 19 වැනි සිකුරාදා - 2006.05.19

*1446 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 310 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 310 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, மே 26 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, மே 11 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2005 இன் இல. 96

### இலங்கை விமானப்படை

விமானப்படைத் தளபதி அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட பதவி உயர்வுகள்

கீழ்க்காணும் பெயரை உடைய அதிகாரிகள் அவர்களின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து பிளயிங் ஒபிசர் பதவிக்கு பதவி உயர்தப்பட்டுள்ளார்கள் :-

பயிலட் ஒபிசர் ஜயேசி அனுனராதா குணரத்ன (ஓடப்/01075) நிர்வாகம் - 06.02.2004
பயிலட் ஒபிசர் ஏகநாயக முதியன்செலாகே சன்திமாலா கயத்திரி ஏகநாயக (ஓடப்/01074) நிர்வாகம் - 26.03.2004
பயிலட் ஒபிசர் ஏதாஉடகே ராஜிகா உமாலி பெரேரா (ஓடப்/01076) தொ.பொ - 26.03.2004
பயிலட் ஒபிசர் கேசானி உதிதா விக்ரமரத்ன (ஓடப்/01078) தொ. கமி - 26.03.2004

ஜீ. டி. பெரேரா,
எயார் மார்ஷல்,
விமானப்படைத் தளபதி.

கொழும்பு,
2006.

5-254

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(ஹோமகம கிளை) - நாவுல்லாகே அருண திலக் பெரேரா.

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006, மாச்சு 29 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"நாவுல்லாகே அருண திலக் பெரேரா என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எல். எஸ். இந்திரஜித் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 21.10.2002 ஆந் தேதிய 399 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 30.04.2005 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது பதினெட்டு இலட்சத்து அறுபத்து நாலாயிரத்து எண்பத்தொரு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 18,64,081.36) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவுள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 399 ஆம் இலக்க முறிமூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 18,64,081.36 பணத்தொகையை 01.05.2005 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து ) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (ஆனால் அவிசாவளை பதிவுப் பிரிவிற்குள்) ஹேவகம் கோறளையின் மெதப்பற்றுவில் ஹோமகம பிரதேச சபைக்குள் பனலுவ என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் 'பனலுவ வத்தை' என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜி. வீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, ஒகத்து 28 ஆந் தேதிய 1090 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 130 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 130 இன் எல்லைகள்- வடக்கு : காணித்துண்டு 129 ; கிழக்கு : காணித்துண்டு 174 ; தெற்கு : காணித்துண்டு 131 அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு 176. அத்துடன் அவிசாவளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் N 256/47 என்னும் தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டதும் 1090 ஆம் இலக்க, சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பதினாறு தசம் நாலு ஒன்று

பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16.41பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், (ஆனால் அவிசாவளை பதிவுப் பிரிவிற்குள்) ஹேவகம் கோறளையின் மெதப்பற்றுவில் ஹோமகம பிரதேச சபையினுள் பனலுவ என்னுமிடத்தில் அமைந்துள்ளதும், 'பனலுவவத்தை' என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, ஓகத்து 28 ஆந் தேதிய 1090 ஆம் இலக்க, வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், காணித்துண்டு 131 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 131 இன் எல்லைகள்- வடக்கு : காணித்துண்டு 130 ; கிழக்கு : காணித்துண்டு 174 ; தெற்கு : காணித்துண்டு 132 அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு 176. அத்துடன் அவிசாவளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் N 218/258 என்னும் தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டதும் சொல்லப்பட்ட 1090 ஆம் இலக்க, வரைபடத்தின் பிரகாரம் பதினாறு தசம் மூன்று மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16.33பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எல். எஸ். இந்திரஜித் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, ஒற்றோபர் 21 ஆந் தேதிய 399 ஆம் இலக்க முறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5-308/1

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(கம்பஹா கிளை) - நிஸங்கா ஆராச்சிகே துஷார இந்திக குலதிலக.

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006, மாச்சு 29 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"நிஸங்கா ஆராச்சிகே துஷார இந்திக குலதிலக என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யு. ராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஏப்பிறல் 7 ஆந் தேதிய 21554 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2005, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது இரண்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து நானூற்றுபத்தெட்டு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 2,77,468.12) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் இருக்கின்றதாதாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 21554 ஆம் இலக்க முறிமூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 2,77,468.12 பணத்தொகையை 2005, ஒற்றோபர் 01 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளையின் தாசியப்பற்றுவில் மதெல்கமுவ என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் கெக்குணகஹ வத்தை கெபெல்ல என அழைக்கப்படுவதுமான காணியின் உரிமைபெற்ற நிலஅளவையாளர் ஜே. கே. என். எஸ். ஜயக்கொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட 24.06.2002 ஆந் தேதிய 417 ஆம் இலக்க, வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அத்துடன் இதன் எல்லைகள்- வடக்கு : ஜே. ஏ. தயாரத்ன ஜயக்கொடி என்பவரின் காணி மற்றும் எம். ஏ. சோமபால டயஸ் என்பவரின் காணி ; கிழக்கு : காணித்துண்டுகள் 2, 3 மற்றும் 5 ; தெற்கு : காணித்துண்டு 6 அத்துடன் ; மேற்கு : ஜே. ஏ. சுனில் சரத்சந்திர ஜயகொடி என்பவரின் காணி மற்றும் ஜே. ஏ. தயாரத்ன ஜயக்கொடி என்பவரின் காணி. அத்துடன் முப்பத்திரண்டு தசம் மூன்று போர்ச்சுகள் (0ஏ. 0றூ. 32.3பே.) அல்லது 0.0817 ஹெக்டேயர்கள் விஸ்தீரணம் கொண்டதுமான காணி, அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர் வகைகள் மற்றும் மற்றெல்லாமும் சேர்த்து. அத்துடன் இது, தொகுதி பக்கம் A 305/153 இல் பதிவு செய்யப்பட்டது. ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 07.04. 2004 ஆந் தேதிய 21554 ஆம் இலக்க முறியில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள பாதையுரிமையுடன் சேர்த்து".

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5- 308/2

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின். 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கம்பஹா கிளை) – விஜேசுந்தர றணசிங்க முகந்திரம் அப்புஹாமிலாகே ஜயந்த நிஹால் மறுபெயர் ஜயந்த நிஹால் விஜேசுந்தர றணசிங்க

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006, மாச்சு 29 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"விஜேசுந்தர றணசிங்க முகந்திரம் அப்புஹாமிலாகே ஜயந்த நிஹால் மறுபெயர் ஜயந்த நிஹால் விஜேசுந்தர றணசிங்க என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏக்கநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002,மாச்சு 22 ஆந் தேதிய மற்றும் 2002, யூலை 29 ஆந் தேதிய முறையே 3114 மற்றும் 3277 ஆம் இலக்க முறிகள்மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2005, பெப்புருவரி 28 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது மூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து நாற்பத்திரண்டு ரூபா (ரூ. 3,47,042) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும், சேருமதியாகவுள்ளதாலும் அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 3114 மற்றும் 3277 ஆம் இலக்க முறிகள்மூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 3,47,042 பணத்தொகையை 2005, மாச்சு 01 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து ) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் என். எச். பி. எவ். ஆரியரத்ன என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளையின் தாசியப்பற்றுவில் மினுவாங்கொட பிரதேச சபையின் உடுகம்பொல உப அலுவலக எல்லைகளுக்குள் உடுகம்பொல என்னுமிடத்தில் அமைந்துள்ளதும், 'மில்லகஹாவத்தை' என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டி. பி. டி. திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 11.06.1993 ஆந் தேதிய 841 ஆம் இலக்க, வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு A2 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும், அதிலுள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு A2 இன் எல்லைகள்– வடக்கு : எச். குணவர்த்தன மற்றும் ஜீவந்தர என்போரின் காணிகள் ; கிழக்கு : வீதி நெடுஞ்சாலைகள் ; தெற்கு : 117/84 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு B அத்துடன் ; மேற்கு : மஹிந்த திஸ்ஸநாயக்க, எச். குணவர்த்தன மற்றும் ஜீவந்தர என்போரின் காணிகள். அத்துடன் கம்பஹா மாவட்டக் காணிப்பதிவகத்தில் A 296/21 என்னும் தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டதும் 841 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் இரண்டு ஏக்கர்கள், ஒரு றூட், பதினாறு பேர்ச்சுகள் (2ஏ. 1றூ. 16பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5-308/3

---

## ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கண்டி கிளை) - மாறசிங்க முதியான்சேலாகே றஞ்சனா லக்சிரி பண்டார மாறசிங்க

ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 2006, மாச்சு 29 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"மாறசிங்க முதியான்சேலாகே றஞ்சனா லக்சிரி பண்டார மாறசிங்க என்பவர் கடப்பாடுடையவராக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு கே. டி. எலங்கசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, யூன் 24 ஆந் தேதிய 3339 ஆம் இலக்க முறிமீது மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2005, ஓகத்து 31 ஆந் தேதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது ஐந்து இலட்சத்துஇருபத்தேழாயிரத்து தொளாயிரத்து நாற்பத்திரண்டு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூ. 5,27,942.97) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகமுள்ளதாதலாலும், அத்துடன் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 3339 ஆம் இலக்க முறிமூலம் ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 5,27,942.97 பணத்தொகையை 2005, செத்தெம்பர் 01 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள்வரை அதன்மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து ) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைகாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது".

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கந்தஹாயக் கோறளையில், பட்டஹேவஹெடவில் கொடமுனை கிராமத்தில் அமைந்துள்ளதும் தலத்துஓயாவைச் சேர்ந்த உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. பி. திஸ்ஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, மாச்சு 14 ஆந் தேதிய மற்றும் 2004, மாச்சு 28 ஆந் தேதிய 63 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 10 என அடையாளமிடப்பட்டதும், புவக்தந்தவேகெதறவத்தை, ஹந்தரேஸவத்தை, பீறவேஹேன, பூஜாகொடஹேன, உதாறவே கெதற வத்தை, பூஜா கொடஹேன, புவக்தந்தவேகும்புர மற்றும் மெதகே எல்லெவத்தை என அழைக்கப்படும் அடுத்தடுத்து வரும் காணிகளின் அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பாகம் முழுவதும். அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டு 10 இன் எல்லைகள்- வடகிழக்கு : சமரக்கூன் மற்றும் ஏனையோர்களால் உரிமை கோரப்படும் புஞ்சிமெனிக்கேவத்தை தோட்டம் ; தென்கிழக்கு : தலாத்து ஓயாவிலிருந்து பிராவத்தை செல்லும் வீதி (PS) ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 8 (பொது அணுகுப் பாதை) அத்துடன் ; வடமேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 9. அத்துடன் முப்பத்தெட்டுத் தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 38.75பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி அதிலுள்ள வீடு மற்றும் ஏனைய கட்டிடங்கள் என்பவற்றுடன் சேர்த்து அத்துடன் 93 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டு 8 என அடையாளமிடப்பட்டுள்ள வீதிப்பாதை மீதான பாதையுரிமையுடனும் சேர்த்து. அத்துடன் கண்டி காணிப்பதிவகத்தில் G 410/196 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணி.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5- 308/4

---

## கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 1857452901
கடன் கணக்கு இலக்கம் : 147694 - இஜ்னா ஜெம்ஸ் & ஜுவலர்ஸ்

கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 29.07.2005 ஆந் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கடன் எடுத்த இஜ்னா ஜெம்ஸ் & ஜுவலர்ஸ் என்ற பெயரில் பங்குதாரர்களாக வியாபாரம் செய்யும் ரோஹன வக்வெல அல்லது நம்புகார வக்வலகே ரோஹான் சந்திரசிரி மற்றும் அனா லக்மாலி கஜசிங்க மற்றும் காணியை ஈடுவைத்தவரான அனா லக்மாலி கஜசிங்க என்பவர்கள் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். டி. பி. எஸ். கருணாநாயக்கவின் 19.3.2002 திகதியுடைய முறிவு இலக்கம் 2299 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகேயின் 18.12.2002 திகதியுடைய முறிவு இலக்கம் 1831 மூலம் கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் அத்துடன் மேற்படி முறிகள் பிரகாரம் 21.03.2005 தேதியன்று கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு 23,49,752 ரூபா தற்சமயம் வருமதியாகவுள்ளதாலும் கொமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் விசேட ஏற்பாடுகள் கீழ் இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட மேற்படி முறிகள் இலக்கங்கள் 2299 மற்றும் 1831 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட பணத் தொகையான ரூபா 23,49,752 பணத்தொகையுடன் 22.03.2005 திகதி முதல் ஏலத் திகதி வரை 14,97,189 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 26% சதவட்டியும் மற்றும் ரூபா 6,95,055 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 இல் உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில்,பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் எரவ்வல கிராமத்தில் அமைந்துள்ள மொரகாவத்த காணியின் நிலஅளவையாளர் டி. ஜே. நானாயக்காரவின் 19.07.1962 திகதியுடைய வரைபடம் இலக்கம் 786 இல் காண்பிக்கப்பட்ட லொட் 17 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 18 (பாதை) ; கிழக்கு : லொட் 18 (பாதை) மற்றும் லொட் 19 ; தெற்கு : இ. டி. சயிமனின் காணி ; மேற்கு : லொட் 16. இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20.05பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 786 இக்காணி கல்கிஸ்ஸ காணிப்பதிவகத்தில் M 2340/112 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டான லொட் 17 தற்சமயம் வரையறுக்கப்பட்ட வரைபடம் இலக்கம் 2198 படி பின்வருமாறு சொல்லப்பட்டது.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில்,பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் எரவ்வல கிராமத்தில் அமைந்துள்ள மொரகாவத்த என்ற காணியின் நிலஅளவையாளர் மேர்வின் சமரநாயக்கவின் 8.3.1988 ஆந் திகதி வரைபடம் இலக்கம் 2198 இல் காண்பிக்கப்பட்ட லொட் 17 யின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20.03பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 2198. இக் கீழ் காணும் காணியின் பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்.

மேற்படி எரவ்வல கிராமத்தில் அமைந்துள்ள மொரகாவத்த காணியின் நிலஅளவையாளர் டி. ஜே. நானாயக்கார 19.07.1962 திகதியுடைய வரைபடம் இலக்கம் 786 இல் காண்பிக்கப்பட்ட லொட் 18 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 9, 13, 12, 8, 7, 3, 4 மற்றும் பி. டபிள்யூ. டி. வீதி ; கிழக்கு : லொட் 28, 27, 26, 25, 24, 23, 22, 21, 20, மற்றும் 13 ; தெற்கு : லொட் 19, 17, 14, 5, 11, 10, 8, 7, 6, 5, 4, 3 மற்றும் 2 ; மேற்கு : லொட் 17, 14, 12, 11, 10, 8, 7, 6, 5, 4, 3 மற்றும் 2. இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 20பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 786. இக்காணி கல்கிஸ்ஸ காணிப்பதிவகத்தில் M 1997/254 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

திருமதி ஆர். ஆர். துனுவில,
கம்பனியின் செயலாளர்.

5- 273

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.